# குரு கிருபா வித்தியாஸ்ரம்
# சிறப்பு பள்ளி

(அறிவுசார்ந்த குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கானது)

44//D 7-வது குறுக்குத் தெரு, டோக் நகர், கோச்சடை,

மதுரை-625016. போன்:0452 4368781

## 2017-2018 ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை

2017-2018 ஆம் கல்வியாண்டிற்கான பள்ளியினுடைய வேலை நாள் 05.06.2017 ஆம் நாள் திங்கட்கிழமையன்று துவங்கப்பட்டது. ஆரம்பநிலை வகுப்பும், இடைநிலை வகுப்பும் என இரு வகுப்பாக பிரிக்கப்பட்டது. ஆரம்பநிலையில் 4-மாணவிகளும், 4மாணவர்களும் மொத்தம் = 8மாணவர்கள், இடைநிலையில் 9 மாணவர்ளும் உள்ளனர். 2016-2017 கல்வியாண்டிற்கான 5 மாணவர்களோடு மேலும் 12 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். புதிய மாணவர்களுக்கு அடிப்படை நிலை மதிப்பீட்டு அறிக்கை அளிக்கப்பட்டது.

**ஆரம்பநிலை வகுப்பு மாணவர்கள்:**

M.பிரீத்தா

P.கோகிலபிரியன்

C.ஆண்ட்ரூஸ் ஜெபராஜ்

M. தனுஷ்கா

K.முருகேஷ்வரி

R.V. ஸ்ரீரஞ்சன்

S. ராஜராஜராஜேஸ்வரன்

V. ஐஸ்வர்யலெட்சுமி

**இடைநிலை வகுப்பு மாணவர்கள்:**

E.கோகுலகிருஷ்ணன்

S. சத்தியானந்தன்

C. விக்னேஷ்குமார்

R. சஞ்சய்குமார்

P. யஷ்வந்த்பிரபு

V. சரவணகுமார்

T. சந்திரமௌலி

A. ஐயனார்

V. சௌமியநாராயணன்

## பள்ளியின் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் விவரம்:

பள்ளியின் தாளாளராக திரு.S.விக்னேஷ் அவர்களும், பள்ளி முதல்வராக திருமதி S.வேளாங்கன்னி கவிதா அவர்களும். பள்ளியின் சிறப்பு ஆசிரியர்களாக திருமதி G.ஆரோக்கிய சரண்யா அவர்களும் உதவிப்பணியாளராக திருமதி P.ராமக்கனி அவர்களும், மாணவர்களின் திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து வருகின்றனர், ஆயம்மாவாக திருமதி K. எர்ரம்மா அவர்களும் உள்ளனர்.மேலும் பள்ளியின் சிறப்பு மருத்துவராக Dr.P.வசந்த் அவர்களும் மாதம் ஒரு முறை பள்ளிக்கு வருகை தந்து மாணவர்களின் உடல் நல குறைபாடு மற்றும் துறு துறு தன்மைக்கு இலவச மருத்துவம் அளித்து வருகிறார். உடலியக்கப் பயிற்சியாளராக Dr.இப்ராகிம் பாபு அவர்களும் வாரத்திற்கு மூன்று நாள் வருகை தந்து உடலியக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு பள்ளி செயல்பட்டு வருகிறது.

## மாணவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது:

**இயக்கச் செயல்கள் (MOTOR MOVEMENT)**

- **நுண்ணியக்கச் செயல்கள் ( FINE MOTOR CO-ORDINATION)**
- **பேரியக்கச் செயல்கள்(GROSS MOTOR ACTIVITY)**
- **அனுதின செயல்கள் ( ACTIVITY OF DAILY LIVING SKILLS)**

**மொழித்திறன் (COMMUNICATION SKILLS)**

- **ஏற்பு மொழித் திறன் ( RECEPTIVE LANGUAGE)**
- **வெளிப்படுத்தும் திறன் (EXPRESSIVE LANGUAGE)**
- **பேச்சுப் பயிற்சி( SPEECH THERAPY )**

**வாசித்தல்- எழுதுதல் ( READING-WRITING)**

- **நிறங்கள்( COLOR ) , வடிவங்கள்(SHAPE)**
- **தமிழ் ( TAMIL) , ஆங்கிலம் ( ENGLISH), எண்கள் & கணிதம் (NUMBERS &MATHEMATICS) , நேரங்கள் ( TIME) , நாணயம் ( MONEY)**
- ***கணினி பயிற்சி* (COMPUTER APPLICATION)**
- **விளையாட்டுப் பயிற்சி ( PLAY ACTIVITY)**
  - **IN DOOR ACTIVITY:**
  - **OUT DOOR ACTIVITY:**
- **வீட்டுப்பயிற்சி ( HOME ACTIVITY)**
- **சமூக செயல் ( SOCIAL ACTIVITY)**

- **நடத்தை மாற்றுப் பயிற்சி ( BEHAVIOUR MODIFICATION)**

- **இணை கல்விசார் பயிற்சி(CO-CURRICULAR ACTIVITIES)**
    - **வாய் மொழியாக கூற பயிற்சி அளித்தல் ( ORAL ACTIVITY)**
    - **வாய்ப்பாட்டு (VOCAL MUSIC)**
    - **நீதி போதனைகள் (MORAL)**
    - **வர்ணம்தீட்டுதல் ( PAINTING)**
    - **நடனபயிற்சி (DANCE THERAPY)**
    - **பொது அறிவு (G. K )**
- **உடல் இயக்கப்பயிற்சி (PHYSIO THERAPY)**
- **கருத்துரை வழங்குதல் (COUNSELLING TO MILD LEVEL STUDENTS)**

**மாணவர்களுடைய பிறந்த நாள் பள்ளியில் கொண்டாடப்பட்டது.**

M.பிரீத்தா (10.06.2017)

C. விக்னேஷ்குமார் (15.07.2017)

V.சரவணகுமார் (25.07.2017)

P.கோகிலபிரியன் (18.08.2017)

V. சௌமியநாராயணன் (07.10.2017)

P.யஷ்வந்த்பிரபு (08.10.2017)

R.V.ஸ்ரீரஞ்சன்(09.10.2017)

C.ஆண்ட்ரூஸ் ஜெபராஜ் (30.11.2017)

V. ஐஸ்வர்யலெட்சுமி(26.01.2018)

**A.**ஐயனார்(31.01.2018)

S. சத்தியானந்தன்(05.02.2018)

K.முருகேஷ்வரி (01.03.2018)

S. ராஜராஜராஜேஸ்வரன்(26.03.2018)

**T.** சந்திரமௌலி(22.04.2018)

**<u>மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்:</u>**

நவம்பர் 29.04.2017 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் மதுரை எம்.ஜி.ஆர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இதில் நம் பள்ளி மாணவர்கள் S.சத்தியானந்தன், V.சரவணகுமார், C.விக்னேஷ்குமார், V.சௌமியநாராயணன், M.பிரீத்தா, V.ஐஸ்வர்யலெட்சுமி ஆகியோர் ஓட்டப்பந்தயத்திலும், பந்து எறிதல், நின்று நீளம் தாண்டுதல் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டனர்.

வியைாட்டு போட்டிகளில் கலந்து கொண்டதின் மூலம் மாணவர்கள் போட்டிகளின் விதிமுறைகள் மற்றும் வியைாட்டு மைதானத்தின் சுற்று சூழ்நிலையை (ஒவ்வொரு விளையாட்டுகளுக்கும் தனி தனி விளையாட்டுத்திடல் இருப்பதை) தெரிந்து கொண்டார்கள்.





**கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்:**

டிசம்பர் 20.12.2017 அன்று கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது, இதில் மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளில் மிகவும் ஈடுபாடுடன் கலந்து கொண்டனர்.பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தார்கள்.






HAPPY

## பள்ளியில் பொங்கல் திருநாள் கொண்டாட்டம்:

ஜனவரி 12.01.2018 அன்று பள்ளியில் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது. இதில் பெற்றோர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு பொங்கல் திருநாள் கொண்டாட்டத்தை சிறப்பித்து மகிழ்ந்தனர்.









**<u>குடியரசு தின விழா:</u>**

கடந்த 26.01.2018 அன்று MGLF - பெற்றோர்கள் மூலம் குடியரசு தினம் சிறப்பு பூங்காவில் நடைபெற்றது. கொடியேற்றம், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றில் நம் மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









## தொழிற் பயிற்சி:

கடந்த 14.02.2018 அன்று சிறப்பு ஆசிரியர் M.சத்தியபாமா அவர்கள் நம் பள்ளிக்கு சிறப்பு ஆசிரியராக பணியில் சேர்ந்தனர், இவர்கள் பேச்சு பயிற்சிக்குரிய அடிப்படை திறன்களையும், தொழிற் பயிற்சிகளையும் (பினாயில், சோப்பாயில், துணி பூமாலை, துணி துவைக்கும் சோப்புப் பொடி,GLASS PAINTING ) ஆகியவற்றை தயாரிக்கும் முறைகளை 16-வயதிற்கு மேலுள்ள மாணவர்ளுக்கு கற்றுத்தருகிறார்கள். மேலும் இவைகளை பெற்றோர்கள், ஆசிரியர்கள் நாட்டமுடன் வாங்குகிறார்கள்.








**யோகா தினம்:**

கடந்த 08.03.2018 அன்று பெண்கள் தினத்தன்று யோகா பயிற்சியாளர்கள் திருமதி.கல்யாணி M.SC (Maths) M.SC(Yoga) M.sc (Counselling & pyschotherapy) மற்றும் திரு.முருகன் M.SC(Yoga) மூலம் அளிக்கப்பட்டது. அன்று மாணவர்கள் யோகா ஆசிரியர்கள் மூலம் பயிற்சியளிக்கப்பட்ட பயிற்சிகள் மூச்சுப்பயிற்சி, தாளாசனம், உட்கட்டாசனம், சூரியநமஸ்காரம், வஜ்ராசனம், திரிகோணாசனம், விருட்சாசனம், ருத்ர முத்திரை, மகா முத்ராசனம்... ஆகிய ஆசனங்களை மாணவர்களுடைய திறனுக்கேற்ப மாணவர்களை செய்யவைத்தனர்.மேலும் அன்று பள்ளியிலுள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், விருந்தினர்கள் அனைவருக்கும் யோகா ஆசிரியர் திருமதி.கல்யாணி அவர்கள் மதிய உணவையும், மாணவர்களுக்கு யோகா செய்வதற்கு தரை விரிப்பையும் வழங்கினார்.அன்று மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், விருந்தினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து யோகா தினத்தை சிறப்பித்தனர்.



















**பள்ளி சுற்றுலா:**

20.03.2018 அன்று பள்ளியின் மூலம் 2 சொகுசு வேன் பிடித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் இணைந்து பள்ளியிலிருந்து வைகை அணைக்கு காலை9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை சுற்றுலா செல்லப்பட்டது, மாணவர்களும் பெற்றோர்களும் சுற்றுலா ஸ்தலத்தை கண்டு மகிழ்ந்தனர்.இவை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது.











**சிறப்பு ஒலிம்பிக் பாரத் தமிழ்நாடு:**

கடந்த 25.11.2017 ஆம் ஆண்டு புதுக்கோட்டை செந்தூரா பொறியியல் கல்லூரியில் சிறப்பு ஒலிம்பிக் பாரத் தமிழ்நாடு நடத்திய மாநில அளவில் சைக்கிள் போட்டி நடத்தியது, இதில் R. சஞ்சய்குமார் என்னும் மாணவன் 2 கி.மீ சைக்கிள் போட்டியில் 3-வது இடத்தைப் பெற்று மெடல் வாங்கினான்.









**அப்போலோ மருத்துவமனை மூலம் நடந்த விளையாட்டு போட்டிகள்:**

கடந்த 15.12.2017 அன்று விளையாட்டு போட்டிகள் நடந்தது. அதில்

M.பிரீத்தா **Running(50m)**

P.கோகிலபிரியன் (பார்வையாளர்)

M. தனுஷ்கா **Side ball passing**

K.முருகேஷ்வரி **Walking (50m)**

S. ராஜராஜராஜேஸ்வரன் **Side ball passing**

S. சத்தியானந்தன் **Standing long jump**

R. சஞ்சய்குமார் **Standing long jump**

V. சௌமியநாராயணன் **Sitting shot put** ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் K.முருகேஷ்வரி **Walking (50m)** ல் இரண்டாவது இடத்தைப் பெற்று பரிசுகளையும் , சர்டிஃபிகேட்டும் வாங்கினாள்.





**சிறப்பு பூங்கா நிகழ்ச்சி:**

சிறப்பு பூங்காவில் கடந்த 04.12.2017 அன்று வாழ்வியல் விழா நடைபெற்றது. அதில் சிறப்பு குழந்தைகளையும், சிறப்பு பள்ளி அனைத்து பணியாளர்களையும் கவுரவிக்கும் நிகழ்ச்சியும், கைவினைப் பொருட்களையும் பார்வையிடும் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றது.









LIONS CLUB OF MADURAI SUCCESS

மேலும் சிறப்பு பூங்காவில் கடந்த 14.12.2017 அன்று நமது சிறப்பு குழந்தைகளையும் , நார்மல் ஸ்கூல் குழந்தைகளையும் ஒருங்கிணைந்து வியைாட நல்ல வாய்ப்பை MGLF - பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர். இதில் நமது பள்ளியிலிருந்து மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர், இவர்கள நமது பள்ளி தாளாளர் திரு.S.விக்னேஷ் அவர்களும் மற்றும் சிறப்பு ஆசிரியர் G.ஆரோக்கிய சரண்யா அவர்களும் அழைத்துச் சென்றனர்.அன்று நமது பள்ளி தாளாளர் சிறப்பு குழந்தைகளின் நலன் குறித்து பேசியது பத்திரிக்கையில் வெளிவந்தது.






## பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள்:

கடந்த 09.04.2014 அன்று பள்ளியில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. அதில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன, ஓட்டப்பந்தயம், கண்கட்டி நடை போட்டி, பலூன் உடைத்தல், கோண் வைத்து நடத்தல்,பந்து சேகரித்தல், பெற்றோருக்கு லக்கி டீம், ரங்கோலி, பலூன் ஊதுதல், கண்கட்டி வட்டம் ஒட்டுதல்,இதில் மாணவர்களும், பெற்றோர்களும் உற்சாகமாக கலந்து கொண்டு வெற்றி பெற்றனர்.















**Recorded By**

**S. VELANKANNI KAVITHA**